செ.வெ.எண்:31 நாள்:19.3.2018

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள், இன்று (19.3.2018) நடைபெற்ற பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.1.06 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.3.2018) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள் முதியோர் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை விலையில்லா வீட்டுமனைப்பட்டா, குடும்ப அட்டைகள், கல்விக்கடன், தொழிற்கடன், சுயஉதவிக்குழுக்கான கடன் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொது மக்களிடமிருந்து பெற்று, அவற்றின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதியின் கீழ் தாட்கோ மூலம், திருமதி.த.கஸ்தூரி-க்கு ஆடு வளர்த்தல் தொழில் புரிய ரூ.20 ஆயிரத்துக்கான காசோலையையும், திருமதி.பொன்னுத்தாய்-க்கு கறவை மாடு வளர்க்க ரூ.20 ஆயிரத்துக்கான காசோலையையும், திரு.மகாராஜன், திரு.மாயகிருஷ்ணன் ஆகியோருக்கு தலா ரூ.13 ஆயிரம் மதிப்பிலான நாதஸ்வரம் இசைகருவிகளையும், திரு.வேல்முருகன், திரு.பொ.கண்ணன் ஆகியோருக்கு தலா ரூ.20 ஆயிரம் மதிப்பிலான தவில் இசைகருவிகள் என மொத்தம் ரூ.1.06 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து, தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையின் மூலமாக பள்ளி மாணவ, மாணவியர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்கும் விதமாகவும், எதிர்வரும் ஏப்ரல் 23 உலக புத்தக தினத்தை முன்னிட்டு அதிக உறுப்பினர் சேர்க்கையை தீவரப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டார நூலகத்தில், திருச்செந்தூர் அரசு பள்ளியை சார்ந்த 1000 மாணவ, மாணவியர்களுக்கு அமெரிக்கா வாழ் தமிழர் திரு.விக்னேஷ் மதிவாணன் அவர்களின் நிதியுதவியுடன் (ரூ.30 ஆயிரம்), நூலக உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். உறுப்பினர்களாக சேர்க்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு, உறுப்பினர் அடையாள அட்டைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள், வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மு.வீரப்பன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.தியாகராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.டி.நவாஸ்கான், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு.காமராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.செழியன், தாட்கோ மேலாளர் திரு.பி.செல்வராஜன், நூலக அலுவலர் திரு.மா.ராம்சங்கர், திருச்செந்தூர் நூலகர் திரு.மாதவன், தூத்துக்குடி மைய நூலகர் திரு.சங்கரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**